**தலைப்பு 310 – அரசாங்க தொழிற்சாலை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 310 – அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தம்பர் 05 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் பெறப்பட்டிராமை. | 2.1.1 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் | 1. புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை | 2.6 |

| | | | |
|---|---|---|---|
| | பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | 2. உள்ளகக் கணக்காய்வு தாபிக்கப்பட்டிராமை. | 2.7 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | களஞ்சிய முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.5 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்ற தெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிலான நிலுவைக் கடன் மீதிகளை அறவிடாமை. | 2.4.1 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத்தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. எனவும், (நி.பி.150 ஐப் பார்க்க) | மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை | 2.2 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

### 2.1.1 எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை பெற்றிராமை

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 11 பிரதான பணிகள் காணப்பட்டதுடன், அந்த பணிகளுக்கிடையிலான ஹந்தபானாகல செயற்திட்டம் மற்றும் தொண்டமான் ஆறு செயற்திட்டம் ஆகியவை முறையே 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி மற்றும் 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதி பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் பௌதீக செயலாற்றல் முறையே 83 சதவீதம் மற்றும் 60 சதவீதம் ஆகும்.

**2.2 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **செலவு வகை** | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **சதவீதம்** |
| **2013** | மீண்டுவருபவை | 55.25 | 54.53 | 0.72 | 1.30 |
| | மூலதனம் | 318.86 | 128.42 | 190.44 | 59.72 |
| | **மொத்தம்** | **374.11** | **182.95** | **191.16** | **51.09** |
| **2014** | மீண்டுவருபவை | 63.27 | 60.62 | 2.65 | 4.19 |
| | மூலதனம் | 145.35 | 125.75 | 19.60 | 13.48 |
| | **மொத்தம்** | **208.62** | **186.37** | **22.25** | **10.66** |
| **2015** | மீண்டுவருபவை | 79.37 | 75.56 | 3.81 | 4.80 |
| | மூலதனம் | 152.20 | 86.75 | 65.45 | 43.00 |
| | **மொத்தம்** | **231.57** | **162.31** | **69.26** | **29.90** |
| **2016** | மீண்டுவருபவை | 90.63 | 76.97 | 13.66 | 15.07 |
| | மூலதனம் | 51.69 | 51.37 | 0.32 | 0.62 |
| | **மொத்தம்** | **142.32** | **128.34** | **13.98** | **9.82** |
| **2017** | மீண்டுவருபவை | 100.26 | 98.66 | 1.60 | 1.59 |
| | மூலதனம் | 58.15 | 57.73 | 0.42 | 0.72 |
| | **மொத்தம்** | **158.41** | **156.39** | **2.02** | **1.27** |

மீளாய்வாண்டின் போது இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

03 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 20 சதவீதத்தினை விஞ்சிய அளவினைக் கொண்டிருந்தது.

## 2.3 பொறுப்புகள்

நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் நிதியேற்பாடுகளை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்திக்கொள்ளப்படாத போதிலும், 07 செலவின விடயங்களுக்குரிய ரூபா 2,753,923 கூட்டுத்தொகையினால் நிதியேற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

தொழிற்சாலைக்குரிய 31001 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 38.00 | 37.43 | 26.00 | 30.87 | 125.00 | 89.35 |

### 2.4.1 நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்படாமை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளில் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி நீங்கலான மீதியானது ரூபா 1,818,326 ஆக இருந்ததுடன், அந்த மீதியிலிருந்து ரூபா 1,377,016 தொகை மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படும் நிலுவைக் கடன் மீதியாவதுடன், அவற்றுள் ரூபா 930,211 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் நிலுவைக் கடன் மீதிகளாகும்.

## 2.5 களஞ்சிய முற்பணக் கணக்கு

### 2.5.1 நிதி விளைவுகள்

களஞ்சிய முற்பணக் கணக்கின் நிதிக்கூற்றுக்களுக்கமைய மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறான ரூபா 14,267,357 தொகையான மிகையொன்றாவதுடன், அதனோடு ஒத்த முன்னைய வருடத்தின் மிகையானது ரூபா 880,770 ஆக இருந்ததுடன், முன்னைய வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 13,386,586 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(அ) வழங்கலுக்காக பணம் செலுத்தும் போது பறறுச்சீட்டில் குறிப்பிடப்பட்ட தொகையை விட வேறுபட்ட தொகையொன்று செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்த கொடுப்பனவுகளுக்குரிய திருத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு உள்ளடங்கலாக கடந்த சில வருடங்களாக களஞ்சிய முற்பணப் பணியின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கொள்வனவுகளை பதிவு செய்வதற்காக முறையான நாளாந்த பெறுவனவுகள் பேரேடொன்று பேணப்பட்டிராததுடன், கைக்காசுக்கான கொள்வனவுகள் மற்றும்

கடனுக்கான கொள்வனவாக வெவ்வேறாக பயன்பாட்டுப் பதிவேடுகளில் உள்ளடக்கி மாதாந்த பேரேட்டுக் குறிப்புகளினூடாக பொதுப் பேரேட்டில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நாளாந்தம் பேணப்படும் கடன்பட்டோர் பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.

**2.6 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தினால் கீழ் காணப்படும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அடியிதழ் சேர் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | ஒதுக்கீட்டுக் (அங்கீகரிக்கப்பட்ட செலவின) பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | ஆளனி வேதன பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் 11 ஆம் அதிகாரம் | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (எ) | நட்டங்கள் தொடர்பாக பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

**2.7 உள்ளகக் கணக்காய்வு**

அரசாங்க தொழிற்சாலையால் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 மனிதவள முகாமைத்துவம்**

**2.8.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக திணைக்களத்தினால் ரூபா

68,164,106 செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, வருடாந்த ஆளனி வேதன செலவினம் ரூபா 149,811 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மிகைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 31 | 17 | 14 | - |
| (ii) | இரண்டாம் மட்டம் | 10 | 02 | 08 | - |
| (iii) | மூன்றாம் மட்டம் | 197 | 119 | 78 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 552 | 316 | 236 | - |
| (v) | ஏனைய(அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 1 | - | 1 |
| | **மொத்தம்** | **790** | **445** | **336** | **1** |